**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.93/2025**
**Sessions :**
**Deposition of Witness for : PW1 , LW1**

| | |
|---|---|
| Name | : திரு.சதிஷ்குமார் |
| Father's/Husband Name | : திரு.பொன்னுசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 27th day of July, 2026**

எதிரிகள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள்.

**<u>முதல் விசாரணை</u>:-**

1. நான் தற்போது காட்டுதேவாத்தூர் கிராமத்தில் குடியிருந்து ஹார்ட்வேர் கடை சொந்தமாக வைத்துள்ளேன். நீதிமன்ற ஆஜர் எதிரிகள் எனது உறவினர் ஆவார்கள். நானும், ஆஜர் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன்.

2. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நடந்த சண்டையில் எனக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது. சம்பவம் குறித்து தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

3. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு

தெரியாது. **(புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**4. (அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க வேண்டுகோள் விடுக்க, அதை ஏற்றுக்கொள்ளப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

5. கடந்த 11.09.2024 அன்று எனது தந்தை பொன்னுசாமி உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார் என்றும் மறுநாள் மாலை 5.00 மணிக்கு பிரேதத்தை அடக்கம் செய்துவிட்டு வீடு திரும்பி கொண்டிருக்கும்போது சுமார் 7.00 மணிக்கு ஆஜர் எதிரிகளான வேலு, கார்த்திக், செல்வம் மற்றும் ஞானவேல் ஆகியோர்கள் என்னை ஆபாசமாக திட்டி தடியாலும், கல்லாலும் என்னை அடித்தார்கள் என்றும் எனக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது என்றும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை... இல்லை**
**மறு விசாரணை....** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.

**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.93/2025**
**Sessions :**
**Deposition of Witness for : PW2 , LW2**

| | |
|---|---|
| Name | : திரு.சக்திவேல் |
| Father's/Husband Name | : திரு.பொன்னுசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 27th day of July, 2026**

எதிரிகள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள்.

**<u>முதல் விசாரணை</u>:-**

1. நான் தற்போது காட்டுதேவாத்தூர் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். நீதிமன்ற ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் ஆவார்கள். நானும், ஆஜர் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன்.

2. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நடந்த சண்டையில் எனது தம்பிக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது. சம்பவம் குறித்து தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**3. (அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க வேண்டுகோள் விடுக்க, அதை ஏற்றுக்கொள்ளப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய**

**அனுமதிக்கப்படுகிறார்)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

4. கடந்த 11.09.2024 அன்று எனது தந்தை பொன்னுசாமி உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார் என்றும் மறுநாள் மாலை 5.00 மணிக்கு பிரேதத்தை அடக்கம் செய்துவிட்டு வீடு திரும்பி கொண்டிருக்கும்போது சுமார் 7.00 மணிக்கு ஆஜர் எதிரிகளான வேலு, கார்த்திக், செல்வம் மற்றும் ஞானவேல் ஆகியோர்கள் என் தம்பியை ஆபாசமாக திட்டி தடியாலும், கல்லாலும் அவரை அடித்தார்கள் என்றும் அவருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது என்றும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை... இல்லை**

**மறு விசாரணை....** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.